அனுமதிக்கும் என்கின்ற எதிர்பார்ப்போடு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், பண்டிகைக் காலங்களிலே விவசாயிகள் துன்பப்படக்கூடாது என்பதற்காக, விளைந்த நெல்லை உடனுக்குடனாக கொள்முதல் செய்வதற்கான அனைத்து உத்தரவுகளையும் வழங்கியிருக்கிறார்கள் என்கின்ற செய்தியைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 42, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

42—

குளிர்பதன சேமிப்புக் கிடங்கு

***13629—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு குளிர்பதன சேமிப்புக் கிடங்கு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு குளிர்பதன சேமிப்புக் கிடங்கு ஒன்று அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்கின்ற பதிலைச் சொல்லிக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன்.

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு ஒரு குளிர் சாதன சேமிப்புக் கிடங்கு அப்பகுதியில் அமையுமென்று சொன்னால், மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற அந்தப் பகுதியில் விளைகின்ற விவசாயப்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2006 ஜனவரி 19]

பொருள்களை, அந்தக் குளிர்சாதன சேமிப்புக் கிடங்கில் சேமித்து வைத்து, விவசாயிகளுடைய வாழ்க்கையில் ஒளியேற்றுகின்றவகையில், விலையில் அதிக உயர்வு வருகின்றபோது, அவர்கள் அந்த விவசாயப் பொருட்களை விற்று, அதிக இலாபம் ஈட்டுகின்றவகையிலும் அல்லது பக்கத்து மாவட்டமான— மாங்கனி மாவட்டம் — சேலம் போன்ற பகுதிகளில் விளைகின்ற மாம்பழங்களை அங்கிருக்கின்ற சிறு விவசாய மக்கள் வாங்கிச் சென்று, இந்த அரசு குளிர்பதனச் சேமிப்புக் கிடங்கில் சேமித்து வைத்து, அதிக விலைக்கு விற்று அவர்கள் வாழ்க்கை ஜீவாதாரத்தை ஓட்டிக்கொள்வதற்கு வழிவகை காணுகின்றவகையிலும் நம்முடைய அரசு, இந்த நடப்பாண்டில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு குளிர்பதனச் சேமிப்புக் கிடங்கு ஒன்றை அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் 7 தனியார் குளிர்பதனக் கிடங்குகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவையே போதுமான அளவு சரக்குகளை வைத்துப் பூர்த்தியடையாமல் இருந்து கொண்டிருக்கிற நிலையில், இதுகுறித்து அரசு எதிர்காலத்தில் பரிசீலிக்கும் என்ற பதிலைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டி.பி. பொன்னம்பலம்.

திரு. டி.பி. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் சமயநல்லூர் தொகுதி, மேலூர் தொகுதி, சோழவந்தான் தொகுதிகளில் மாம்பழம், கொய்யாப்பழம், சப்போட்டா, வாழைப் பழம் மற்றும் தக்காளி ஆகியவகை உணவுப் பொருட்கள் அதிகமாக விளைகின்ற காரணத்தினால், இவற்றில் ஏதாவது ஒரு தொகுதியில் குளிர்பதனக் கிடங்கு வசதி செய்தால், எங்களுடைய மதுரை மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதி மக்களுக்கும் பயன்படும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து தனியாகக் கேள்வி தொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பெ. பழனியப்பன்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தருமபுரி மாவட்டத்தில் மாங்கனி, தக்காளி, புளி போன்ற நல்ல பொருட்கள் அதிகமாக விளைந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதிலில் கூறுகின்றபோது, 7 குளிர்பதனச் சேமிப்புக் கிடங்குகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அவை, தனியார் குளிர் பதனக் கிடங்குகள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவற்றிலே அந்தப் பொருட்களை வைத்துப் பதப்படுத்துகிறபோது, அவை தனியாருடையவையாக இருக்கின்ற காரணத்தால், வாடகையை அதிகமாகப் பெறுகிறார்கள். ஆகவே சில நேரங்களில் மழை பெய்கிறபோது எங்களுடைய மாவட்டத்தில் தக்காளி போன்ற பயிர்களையெல்லாம் விவசாயிகள் ஒரே நேரத்தில் பயிரிடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே தக்காளி, புளி, மாங்கனி போன்ற பொருட்களைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்த செலவிலே இருக்கவேண்டுமென்று சொன்னால், நம்முடைய அரசாங்கத்தின் மூலமாகவே அங்கே தேசிய குளிர்பதனக் கிடங்கு ஒன்றை ஏற்படுத்த நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று தக்கவாறு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 43 பிறகு எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 44, திரு. அ. நடராஜன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

44—

குழந்தைகள் நல மையம்

***16366—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—